ஓலை 35 | ஓசை 133 | மார்ச் 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்**
**கள்ளத்தால் கள்வே மெனல்.**

குற்றமானதை உள்ளத்தால் எண்ணுவதும் குற்றமே,
தானால் பிறன் பொருளை அவன் அறியாதப் வகையால்
வஞ்சித்துக்கொள்வோம் என்று எண்ணாதிருக்க வேண்டும்.

**Translation:**

'Tis sin if in the mind man but
thought conceive;
'By fraud I will my neighbour of his
wealth bereave.'

**Explanation:**

Even the thought (of sin) is sin;
think not then of crafiily stealing
the property of another.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# முருகனே துணை

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பற்றறுந்தெம் மானோடிப் பதுங்கிப் வாழ
பாரமில்லை பாரமில்லை கரும்பொன் நெஞ்சில்
சொற்சிலையாய் வடித்தனளோ துறக்கம் சேர
சொப்பனமாய் மாறுமென்றெண் ணியேவாழ் மீளி
குற்றுயிராய் உடற்சேர்ந்த குழந்தை இல்லாள்
குடிநீங்கிப் போம்நொடியில் வெறுமை யாயின்
உற்றவனாய் யாவுமாகி முள்ள மெங்கும்
உமையாலன் வீற்றிருக்க அநாதை யானோ?

எம்மான் - தந்தை ; துறக்கம் -சொர்க்கம்; மீளி -ஆண் பருவம் ; குற்றுயிர்- பாதிஉயிர் ; உமையாலன் - முருகன்



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# பெருமையும் சிறுமையும் தான்தர வருமே

நன்மைக்கும் தீமைக்கும் நாமே ஆக்கம்
நற்செயல்கள் செய்திட்டால் நன்மை காக்கும்
என்றென்றும் நினைவினிலே ஏற்று நீயும்
எழிலாக எண்ணங்கள் இனிதாய்ப் பூக்கும்
இன்னல்கள் வந்திட்டால் எதிர்த்தே நிற்பாய்
இடைவிடாத முயற்சியினால் ஏற்றம் கொள்வாய்
துன்பத்தின் விதைகளுக்கு தூதும் நாம்தான்
துயர்நீக்கும் வலிமைக்கும் தூணும் நாம்தான்

முன்செய்த வினைகள்தான் முகைக்கும் இங்கு
முகப்பாக வழிநடத்தும் முதலாய் நின்று
பின்விளைவாய் வருவதெல்லாம் பிழைகள் அன்று
பெய்திடுமே வினைப்பயனும் பெரிதாய் வந்து
நன்றாக பதித்திட்டால் நயன்மை சேரும்
நடைமாறிப் போனாலோ நாடும் துன்பம்
பன்முகமாய் பணியாற்றும் பாங்காய் பண்பும்
பரிமாற்றம் செய்திடுமே பாரில் பின்பும்

விதைத்திடுவோம் நல்வினைகள் விளைச்சல் காண
விடியலாக மாறட்டும் வினையும் கூட
கதைநூறும் உண்டிங்கே கருத்தை கூற
கனிவாக பின்பற்று காலம் போற்ற
உதவிடுவோம் யாவர்க்கும் உளமாய் என்றும்
ஊக்கங்கள் அதுகொடுக்கும் உலகில் வாழ
மதகாக செயல்படுமே மடைகள் மாற்ற
மலர்கின்ற நம்வினைகள் வாழ்க்கை தோறும்.

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# புதிய ஆத்திச்சூடி

அ - அன்பே சிவம்

ஆ - ஆங்கிலமும் அவசியம்

இ - இணையத்தோடு இணை

ஈ - ஈ.வே.ரா வைப் பின்பற்று

உ - உறவுகளை நம்பாதே

ஊ - ஊரோடு ஒத்து வாழ்

எ - எளிமையே பெருமை

ஏ - ஏணிகளை கைவிடாதே

ஐ - ஐம்பதிலும் வளை

ஒ - ஒற்றுமையே ஒசத்தி

ஓ - ஓங்கச்செய் மனிதம்

ஔ - ஔவியம் தவிர்




கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# சந்திப்பு

நாம்
சந்தித்துக் கொண்ட
முதல் சந்திப்பில்
மாற்றங்களேதுமில்லை

அடுத்த
சந்திப்பில்
ஒரு சில மாற்றங்கள்
நிகழ்ந்தது எனலாம்

பிரிதொரு
சந்திப்பில்தான்
பெரியதொரு மாற்றங்கள்
நிகழ்ந்தது நமக்குள்

இறப்பிற்கு
முன் நிகழும் சந்திப்பே
இறுதி சந்திப் பென்றாகும்
நமக்கு



அப்போது
நமது சந்திப்பில்
மாற்றங்களேதுமற்று
விழிகள் கசியும் ஈரத்துளிகளில்
பூரண அன்பு
நிச்சயம் மலர்ந்திருக்கும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# எது நிரந்தரம்?

ஏராள வஞ்சகம் இந்த வாழ்க்கையில்
கருப்பெற்ற முதல் கண்விழியை
வெளி உலகம் அறிந்த
பிறப்பு முதல் இறப்பு வரை
நிரந்தரம் ஒன்று உண்டா



வாழ்விலும் வாழ்க்கையிலும்
வளர்ப்பிலும் வளர்ச்சியிலும்
உனக்கும் எனக்கும்
இதிலும் எதிலும்
குருதி களம் கண்ட நாள்
குமருதே குடியும்

விலையும் வீரமும்
வீன் பேச்சு விளையாட்டு
நட்பும் நாடகமும்
அறிந்ததும் அறியாததும்

நம்பிக்கை அவநம்பிக்கை
எவன் ஒருவனால்
ஏழை பணக்காரன்
ஏடும் நாடும்

உன் உயிர் என் உயிர் ஜீவன்
சமமில்லையோ நம் சாப்பாட்டில்
சாக்கடையும் சாதியவாதியும்
தன்னலத்தில் புண்பட்டது

வேடிக்கை வினோதம்
விதவிதம் எதிலும்
நீ யார் நான் யார்
உனக்கில்லை எனக்கு மட்டும்

லட்சத்துக்கு சத்தம் உண்டு
லட்சியத்திற்கு யார் உண்டு
யாருக்கு யார் என்று
அறிவோம் நாள் ஒன்று

நிரந்தரம் எது என்று
மனிதா மடமை மனிதா!

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# ஏழை சிறுமியும் பறவையும்

அன்னபூரணியின் மறப்பிறவியோ இவள்
ஆடைதான் பழையது
இச்சிறுமியின் எண்ணமோ வெகுசிறப்பு
ஈகையில் ஈன்றத் தாய்க்கு நிகரானவளோ

உணவோ கொஞ்சம் தான் இவளின்
பகிர்ந்து உண்ணும் செயலோ வியப்பிற்குரியதே!
ஊரே வியக்கும் இவள்
பறவைக்கு பசியாற்றியதை கண்டு.
எவ்வளவு பெரிய செல்வமும் ஈடாகாது
இவளின் குணத்திற்கு.

ஏழையின் உள்ளத்தில்தான் இறைவன் குடியிருப்பான்
என்பதைக் உணர்த்துகிறாளோ
ஐந்தறிவு ஜீவனுக்கு உணவிட்ட இவள்
பாரியின் வம்சாவளியோ
ஒழுகும் குடிசையில் கூட ஒப்பற்ற
உள்ளமதைக் கண்டு மெய்சிலிர்த்தேனே



ஓலை வேயப்பட்ட குடிசையில்
உன்னதமான தேவதை இவளோ.

நமது கலாச்சாரம்
வளரும் சந்ததியினரால் தழைத்தோங்குமே
இஃதே இவளின் கருணைக்கு எல்லை ஏது
பாசத்திற்கும் இரக்கத்திற்கும் பணமும்
இடமும் தேவையில்லையே என்பதை உணர்த்தவே இக்காட்சியோ.

கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# கவிதை தினம்

உள்ளிருந்து வரும் உணர்ச்சியால் எழுதுவது
வார்த்தைகள் தானாக உதிக்க வேண்டும்
ரசனையும் கற்பனையும் இணைந்தே வருமே
கவிதை எழுதும் முன் வார்த்தைக்கு உயிர் கொடுக்க வேண்டுமே
சிந்திக்க சிந்திக்க வருமே அருவியின் ஊற்றாய்
ஒரு வரியிலும் எண்ணற்ற கதை பேசி நம்மை அதிர வைக்குமே
தலைப்பு தந்தாலும் உடனுக்குடன் எழுதும் ஆர்வம் வர வேண்டுமே
எழுதுகோல் ஆயுதமாக இருக்கும் போது வரிகளுக்காக பஞ்சம்
உயிரோட்டம் கொடுத்து
எழுதுவது கவிஞனுக்கு கை வந்த கலையே
கற்கண்டாய் சொல்லாக்கம் பெற்று நாவினில்
கரைந்து போகாமல் நிற்கும் வரிகள்
கருத்துடன் காரியத்தையும் நடத்தி சென்றதே
எழுதுபவர் மனதில் கருத்தை சுமந்து
வலிமை பெற்று திகழவும் வைத்ததே
காலம் காட்டும் கண்ணாடியாய் பிரதி பலித்து
கவிஞனின் குழந்தையாய் தவழவும் செய்ததே
மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழியாய்
திகழும் தமிழைக் கொண்டு
கவிதை எழுதுவதில் சிற்பமாய் மிளிர்ந்ததே
கவிஞன் வாழ்வில் ஏற்றம் பெற்று
கவி மழையாய் பொழிகிறது அனு தினமும் இங்கு



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# புனிதம்

அன்பை வழங்கும் இதயம் புனிதம்
ஆறுதல் அளிக்கும் சொற்கள் புனிதம்
உதவி செய்யும் கைகள் புனிதம்
தீங்கு நினைக்காத எண்ணம் புனிதம்
கடமை தவறாத கவனம் புனிதம்
மடமை நீக்கும் ஞானம் புனிதம்
கபடம் இல்லாத புன்னகை புனிதம்
துரோகம் செய்யாத தோழமை புனிதம்
நலம் பேணும் உறவு புனிதம்
மானம் காக்கும் மனிதம் புனிதம்



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# பைம்புனத்து ஓரேர் உழவன் போல்

பொருள் வேண்டி பொருள் தேடி
சேட்புலம் சென்ற தலைவன்
சேட்புலம் வாழும் தலைவியை
நெஞ்சில் நினைத்தே
வினை முடித்து திரும்புகிறான்.

குறிஞ்சியும் முல்லையும்
நல்லியல்பிழந்து பாலையாகிய
அவ்வழியில்,
பருவ வரவறிந்து
வெஞ்சுர ஆரிடையில்
வெம்பரல் கிழிக்க நடந்தவன்
நெஞ்சிடம் புலம்புகிறான்.

நெஞ்சே!
கார்காலம் முடிந்திட,
மலையிலோ அருவித்
தொங்கலில்லை.
காட்டாற்று வெள்ளமும்
காணாமல் தவிக்கிறேன்.

மலர்களோ மண்ணில்
உதிர்ந்து வாடப்
பஞ்சுரப் பண்ணில்
பாலையாழ் மீட்ட



ஆறலைப் பறையொலிக்க
வானில் பருந்தும் கழுகும் வட்டமிட
வலியிழந்த புலி,செந்நாய்க்கிடையே
வழிப்பறி செய்வோர் வருமுன்னே

எயினர் மறவர் வாழ்விடத்தை
ஈரம் காயும் முன் ஓர் ஏர்
கொண்டு வல் விரைந்து உழுதிடும்
உழவனைப் போல் விரைந்து

கடந்திடத் துடிக்கிறேன்.
ஆடும் மூங்கிலாய்ப்
பணைத்தோள்
களத்தில் சுழலும் வாளாய்
முகத்தில் சுழலும் கண்ணினாள்
வாழ்விடமோ நெடுஞ்சேண் இருப்பதை நினைத்தே
நோகிறேன், யானே!

கவிஞர் செ.கலைவாணி,ஆஸ்திரேலியா

# உயிர்ச் சிலை

தொண்டைக்குழி
தாண்டி விழுகிறது
இவள் உள்ளத்து
கசப்பின் வாசம்

முருங்கை வலுவில்
முணங்காது
முந்நூறு சுமக்கிறாள்

சித்திர வடிவுடை
சிறு இடை சுமந்தும்

சீர்மிகு நேர்த்தி
சிதைக்காத தன்மையும்
கைவந்த கலைமகள்

கற்பனையில்
இவள் உனக்கு
கல் போன்று

என் செய்வாய்!?

கனவில்
கதையாகிப் போன
உயிர் சிலையின்
மூச்சுக் காற்று
அறியுமோ
உன் மனம்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# வசந்தமே விரைவில் வா

மண்ணிலுள்ள உயிர்களெல்லாம்
மழையின்றி தவித்திட



இயந்திரத்தால் உழுதிடும்
பெருங் கொடுமையோடு

மானிய வரிசையில்
மண்டியிட்டு வதங்கி

விளையுமென்று
புதுரக விதையினை தூவிட

கூலிக்கு ஆளின்றி
களைகளும் வளர்ந்திட

முளைச்சதெல்லாம் ஈரமின்றி
காய்ந்ததை கண்டு

பரிதவித்து நின்றவனின்
துயரெல்லாம் நீங்கிட

மழையென வசந்தமே
விரைவில் வந்திடு.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# எதிர்பார்ப்பு இல்லா வாழ்வு

மாந்தர் சீரோடு வாழ்ந்து சிறக்கவே
மண்மீது மழையே வீழ்ந்து மகிழ்கிறது
கைமாறாய் மனிதன் என்ன செய்வான்? என்றே
ஒருபோதும் எண்ணியது இல்லை
வெட்டிய பிறகும் விருந்து சமைக்க
விறகைத் தருகிறது மரமும் நன்றாய்
உயிரை வதைக்கும் வலியைத் தரினும்
உயிர்வளி தந்தே ஒளிபெறச் செய்யும்
உயர்ந்த மரங்கள் மண்ணின் வரங்கள்
மனிதா! இயற்கையில் இருந்து கற்றிடு
இயல்பாய் எவர்க்கும் உதவுமெண்ணம் பெற்றிடு
எதிர்பார்ப்பு இல்லாமல் வாழ்க்கை என்பதை
தன்னலம் மறத்தல் எதனினும் நன்று
பொதுநலமாய் வாழ்தல் காலத்தையும் வெல்லும்
இயன்ற சேவையை எவருக்கும் செய்திடு
எதார்த்த நிகழ்வை நேசிக்கப் பழகு
எவரிடத்திலும் நின்று பார்த்தல் அழகு
பிறருக்காக வாழ்தலே என்றும் இனிமை



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# வேற்றுகிரகவாசிகள்

அண்மையில் இருப்பவரை கத்திபேசி,
கடித்து குதறுவோரை - நாய்களும்

ஆசைபட்டவளை அடித்து துன்புறுத்தும்
அரக்கன்களை - புலியும்

இஷ்டப்பட்டதிற்காக பிறரை வஞ்சித்து
கஷ்டபடுத்துவோரை - நரிகளும்

ஈடான தெய்வத்திற்கு சமமான பெண்களை
பிராண்டி எடுப்பவர்களை - கரடிகளும்

உள்ளொன்று வைத்து
புறமொன்று செய்வோரை - ஓநாய்களும்

ஊழல் செய்து
ஊரை கெடுப்போரை - பெருச்சாளிகளும்

எலிவலை போன்ற வீடுகளையும்
அடித்து பிடுங்குவோரையும் - பாம்புகளும்

ஏழைகளை ஏமாற்றுவோரை - கழுகுகளும்

ஐந்தறிவே உள்ள பிராணிகளை வைத்து
கள்ளத்தனம் செய்வோரை-யானைகளும்,

ஒற்றுமையான வாழ்வில்
வேற்றுமை காணுவோரை - காகங்களும்

ஓடாமல் சோம்பித் திரிவோரை - மாடுகளும்

ஔவிஷதத்தில்
கலப்படம் செய்வோரை - அன்னப்பறவையும்

வித்தியாசமான ஜென்மங்களை விலங்குகளும்
வேற்றுகிரகவாசிகளாகவே நினைத்திடுமே!



கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# நேசம் என்பது

நேசம் என்பது
பலருக்கும் பலவிதமாக
பெயரளவிலேயே
கையாளப்படுகிறது.

இதில்
கேட்டுப் பெறுதலும்
விட்டுக்கொடுத்தலும் மட்டுமல்ல
சிலசமயம் கேட்காமலே
திணிக்கப்படுவதும் உண்டு.



வாதங்களுக்கு மத்தியில்
சில சில நேசங்கள்
அதன் ஆழம் கண்டுணர்ந்து
வளைந்து கொடுக்கவும் செய்கிறது
ஒடிந்து போகவும் செய்கிறது.

எல்லைகளும் முடிவுகளும்
ஒருதலைப்பட்சமாக இருப்பின்
நேசமென்பது நெகிழியாய்
இருந்தும் இறவாது
நெடுங்காலம் உயிர்கொல்கிறது.

புரிந்து கொள்வதற்கும்
உணர்ந்து கொள்வதற்கும்
அவகாசம் அளித்து
ஏங்கித் தவிக்கையில்
மன்னிப்பு வாயிலாக
மீண்டும் உயிர்கொள்கிறது.

மேலோட்டமாகப் பார்த்தால்
நேசம் என்பது வெறும் சொல்
ஆழ்ந்து சிந்தித்தால்தான் தெரியும்
அதன் வலிகளும் சுகங்களும்
தனிப்பட்ட உணர்வுகளோடு
எழுத்தில் அடங்காத பொக்கிஷமென்று.

"உன்னை நேசிக்கிறேன்" என்று
வேறொருவர் உங்களிடத்தில்
சொல்வதற்கு முன்னும்
"நான் நேசிக்கிறேன்" என்று
வேறொருவரிடத்தில்
நீங்கள் சொல்வதற்கு முன்னும்.

இனி கவனமாக இருங்கள்.

கவிஞர் இரா.இராஜா, சேத்தியாத்தோப்பு

# தாய் – தாரம்

தொப்புள் கொடிக்கும் மடிமேல் துயிலுக்கும்
உப்பும் இதழ்முத்தத் திற்கும்ஆம் - அப்பழுக்கு
இல்லா தெரிவையும் பேரிளம் பெண்ணுமாம்
நல்துணை இங்கு எனக்கு.

(என் தொப்புள் கொடிக்குச் சொந்தமானவள், மடிதூங்க இடம் தந்தவள், கன்னம் உப்பிக் கொடுக்கும் முத்தத்திற்கு உரியவள், எக்குறையுமில்லாத பருவப்பெண்ணும், வயதான தாயும்(இருவருக்கும் ஒரு சேர பொருந்தும்) நல்ல துணை எனக்கு)



கவிஞர் புதியவன் அன்பரசு

# காதலின் பரிசாய்

நீ வேண்டும் என்று நினைத்தால்
தடை எதுவாயினும்
தகர்த்தெறிந்து பெற்றுக்கொள்வாய்.

அலட்சியமாய் என்னுடையதுதான்
எப்போது வேண்டும் என்றாலும்
எடுத்துக்கொள்வேன் என்று
விலகியே நிற்காதே

இமையின் நீண்ட உறக்கம்
என்றென எவனும் அறியாது.
உன் உணர்வை உணர்த்திட
தனியொரு நாணமோ.
நாட்களோ
நாழிகையோ
தேவையும் இல்லை
தேர்ந்தெடுத்திடவும் அவசியமில்லை.

உன்னவள்(ன்) தான்
ஆயினும் உன் அலட்சியம்
அவளை(னை) மெய் இருப்பினும்
ஆத்மாவை ஆழத்திலே புதைக்கக்கூடும்.

காதலின் எதிர்ப்பார்ப்புக்கு
காதலை பரிசலிப்பதை விட
உன் நிமிடத்தை பரிசளி.
அவள்(ன்) மனம் குளிர்ந்திட
காதலை கொட்டித்தீர்ப்பாள்(ன்).



கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# விரைவில் உன்னிடமே

"நீ வெண்ணிலவும் இல்லை நட்சத்திரமும் இல்லை
இவைகளை எல்லாம் அள்ளி சூடிக்கொள்ளும் முழுமை நீ"
நீ சிரிப்பதைப் பார்க்கும் போதெல்லாம்,
நீதான் என் உலகம்,
அதைத்தான் நான்
நினைக்கிறேன்.
பேச ஆயிரங்கள் இருந்தும்
உன் அசைவுகளையும்
உன் ரசனைகளையும்
மவுனமாய்
ரசித்திடவே செய்கிறேன்!
உன்னை போல யாருண்டு
எனக்கென காட்டிடும்
பாசமழையில்
அநுதினமும் நனைத்திட செய்யும்
உந்தன் அன்பினை எங்ஙனம் விவரிப்பேன்.
சொந்தம் பந்தம்
உற்றார் உறவினரிடையே
கிடைக்காத ஆழமான
நேசத்தை!



கவிஞர் ஜெனி கிரேஸி,மதுரை

# இளமைப் பருவம்



இனிமையான பருவம் இதமான தருணம்
இதயத்தை வருடிவிடும் இனிப்பாக மாற்றிவிடும்
இளவேனில் பருவம் போல் இளமையும் அழகே
இன்பமே அதை நித்தம் நினைக்கையில்

துள்ளித் திரியும் வயது தான்
துள்ளாத மனமும் துள்ளும் தான்
துன்பம் கண்டாலும் மனம் துவளாது
துச்சமாய் எதிரியை துவம்சம் செய்திடும்

சாகசங்கள் தினம் செய்திட தோன்றும்
சளைக்காமல் சில சாதனைகளும் செய்யும்
மறக்காத நினைவுகளை பொக்கிஷமாய் தந்திடும்
நினைத்தாலே ஏங்க வைக்கும் இனிமை இளமை

அழகின் தெய்வீகம் அங்குதான் தெரியுது
வீரத்தின் விளைவிடம் அங்குதான் தோன்றுது
உற்சாகத்தின் மொத்த இருப்பிடமும் அங்கேதான் பொங்குது
இளமையில் ஜெயித்து விட்டால் இருக்கும் வரையிலும் சுகமே

கனாக்காணுவது மட்டுமல்ல கனவினை நினைவாக்கும் தருணமிது
முதுமையில் திரும்பி பார்த்தாலும் இளமை இனிக்க.
இளமையிலேயே இலட்சியத்தை அடைந்திட முயன்றிடுவோம்
வெற்றி கண்டவர்களின் வரலாறு இளமையில் விடாமுயற்சியே

மனமிருந்தால் போதும் வானத்தையும் வசப்படுத்தலாம்
அணைப்போட்டு தடுத்தாலும் அடங்காது பெருக்கெடுக்கும்
காட்டாற்று வெள்ளம் தான் இளமையில் வேகம்
விவேகமாய் மட்டும் வாழ்ந்திட்டால் வையகமே போற்றும்

இளமையில் கல் இயன்றவரை கற்பி
இகம் அது சிறக்க இளமையில் செயல்படு

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# சிறகை விரி

சிறகை விரி சின்னப்பறவையே
பரந்த வானமே உந்தன் சிறகில்
சூரியனோ உந்தன் முதுகில்
பலமும் வலிமையும் உன் கண்களில்
பாந்தமாய் நீந்து காற்றினில்

சிறகை விரி சின்னப்பறவையே
இரவைப் பார்த்துப் பயப்படாதே
நிலவைச் சொண்டில் கொத்திச் செல்
நட்சத்திரமின்மினிகள் உன்னில் வேய்ந்து கொள்
இப்போது நீதான் பூமிக்கான ஒளி
அவநம்பிக்கை வேண்டாமே அந்தரத்தின் ஆதாரமே நீதானே

சிறகை விரி சின்னப்பறவையே
கடலும் மலையும் தாண்டிச் செல்
காடும் வயலும் கடந்து செல்
கண்களில் வை சுதந்திரக் கனவை
கட்டுக்குள் கவனமாய் அடிமைத்தனம் பூட்டிவை
கனக்கும் கவலை களையெடு இதயத்தில்



சிறுபறவைதான் சிறு இறக்கைதான்
ஆயினுமவை அக்கினிச் சிறகுகள் அல்லவா?
காற்றைக் கிழிக்கும் கூரிய வேலல்லவா?
கண்களை மூடாதே காலத்தை முடக்காதே
கடிதான விடயங்கள் எளிதாக முடியுமே
கரை தாண்டு விடியல் விரைவில் கண்முன்னே

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# என் இனிய தனிமையே

யார் நீ என்று என்
மனம் கேள்வி கேட்க!
கவலைகளுக்கு இடையில்
கண்களும் கலங்க!
குழம்பிய குட்டையில்,
தெளிந்த நீரோடை போல!
மனமோ அதில் ஊஞ்சலில் ஆட!
என்னை நான் ஆராய்ந்து பார்க்க!
என்ன என்று சொல்ல!
ஏதும் இல்லை உரக்க சொல்ல!
இன்று என்ற நிஜத்தை தவிர!
உதட்டில் சிறு புன்னகை உதிர்க்க!
மனதில் சிறு நிம்மதி பிறக்க!
உன்னிடம் உள்ளது எது என்று ஆராய!
கற்ற கல்வி மட்டுமே என்று உணர!
திறமை என்பதில் தேர்வு எழுத!
திகட்டதா இன்பம் உன்னை வந்து சேர!
இதுவே போதும் என்று தோன்ற!
இதுவரை துணையாக இருந்த!
தோழிக்கு நன்றியும் தெரிவிக்க!
நான் திரும்பவும் வருவேனே என்றது,
என் இனிய தனிமை!



கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# காலகாலனிடமொரு வேண்டுகோள்

மகேஷ்வரனே, சர்வேஸ்வரனே கால காலனே,
மனிதம் இல்லா மனிதர்கள் நிறையுலகில்
மனிதர்களைக் கண்டு காலனும் அஞ்சுகிறானோ?

மார்க்கண்டேயர் என்ற முனிக்குமாரர் அன்று
மரணம் தனக்கு நிகழப்போவதை அறிந்து
மாதாபிதா கண்கலங்கக் கண்டு வாழவிரும்பி
மகேஷ்வரனே உன்னை சரணடைந்து
மரணமில்லா பெருவாழ்வு பெற்றாரென்று பிறர்சொல்லக்
கேட்டதுண்டு; அவராற்றல் எண்ணி வியந்ததுமுண்டு!

மரணம் நிகழ்ந்த வீடுகளில் கூடிய
மனிதர்கள் கூட்டம்வாழ்வின் நிலையாமை யெண்ணி
மயங்கிப் பிதற்றுவது உண்டு; அதுசுடுகாட்டு
வேதமென்று பெயர்பெற்றதுண்டு; ஆனால் இன்று
வேதனையோடு கூடும் கூட்டமும் குறைந்தது;
சுடுகாட்டு வேதமிங்கு ஓதுவாரும் இல்லை;
சுடச்சுட வந்து கொதிக்கும் வெந்நீரைக்
காலில் ஊற்றியவராய் துள்ளிக்குதித்து ஓடுகிறார்;
மகிழ்வில் பங்கேற்கத் திரண்டிடும் பெருந்திரள் கூட்டம்
அகத்துயரில் பங்கேற்க தயங்குவதேனோ காலகாலனே?




மரணம் மதுரம் என்றுரைப்பர் ஞானியரவர்
மரணப் பயமின்றி வாழ்ந்தனர் நிறைவோடு;
மரணப் பயங்கொண்ட சாமானிய மனிதர்களின்று
மரணத்தை விரும்பியதை வம்பாய் அரவணைப்பது
மண்ணில் பன்மடங்கு பெருகவே காண்கிறோம்!

விழிப்பதைப் போல்தான் பிறப்பு என்றும்
விழிமூடி தூங்குவது ஒத்தது சாக்காடென்றும்
வான்புகழ் வள்ளுவன்சொன்ன தறிந்துதிருந் தினராவல்லது
வாழும்வரை கொண்டாடிவிட்டு போகலாமென்று மனிதர்கள்
வாழ்கின்றனரா எனவெழுந்திடுமென் வினாவிற்குக் காலகாலனே
விடையுனக்குத் தெரியுமெனில் அடியேனெனுக்குப் பகர்வாயே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# வான்மழையே ஆதாரம்

## அதிகாரம் -2

அழிவில்லாத பூலோகமே உன்னை தீண்டும் மழைத்துளி இல்லையேல்
பசியில் வாடுமே உன்னில் வாழும் உயிர்கள் அனைத்தும்

வானில் இருந்து பொழியும் மழைத்துளியே
உன் பரிமாணங்கள் தான் எத்தனை எத்தனையோ

பெரும் புயலாகி வெள்ளப் பெருக்கெடுத்து உனது தன்மையை வெளிப்படுத்தி
மும்மாரி பொழியவில்லை எனில்
உழவு தான் சிறக்குமோ முப் போகம்தான் விளையுமோ

ஆக்கமும் நீயே
அழிவும் நீயே

மழைத்துளியே நீ மண்மகளைத் தீண்டவில்லை எனில்
புல்கூட தன் புனிதத்தை இழக்குமே

மேகமாய் தனது நீரை தரவில்லை எனில்
கடலே நீயும் வற்றி போவாயே

பூஜைகளும் சிறக்காதே
வானம் மும்மாரி பொழிய வில்லையெனில்

அற்புதமான பூலோகத்தில் மழை நீர் இல்லையெனில்
தானமும் தவமும்தான் ஏது?

நீரே எல்லா உயிருக்கும் ஆதாரம்

உயிரினங்கள் கடைசி மூச்சு வரை
நீரின்றி அமையாது உலகு

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# வீணான செயல்

குழந்தை
சிட்டுக்குருவியுடன்
குசலம் விசாரிக்கலாம்



பூனை
மணிப்புறாவை
தொட்டுப் பார்க்கலாம்

யானை
ஆழ்நதியை
கடந்து போகலாம்

மயில்
கார்மேகமதை
வருடிக் கொடுக்கலாம்

மனிதன்
அடிவானத்தை
அசைத்து விளையாடலாம்

சிறகு
உயிரினங்களின்
மெல்லிய கனவு

பிரிந்த சிறகை
திரும்பிப் பார்ப்பதில்லை
முன்னோக்கி செல்லும் பறவை

இழப்புக்காக
கண்ணீர் வடிப்பது
வீணான செயல்

உலகுக்கு
உணர்த்தி செல்கிறது
ஒரு உதிர்ந்த சிறகு.

கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# உலக கவிதைகள் தினம்

தினமும் பிறக்கும்
குழந்தைகளைவிட
பிரபலங்களின் பிறந்தநாளில்
பிறக்கும் குழந்தைகளுக்கென
ஒரு சிறப்புண்டு - அதுபோலதான்
இந்த கவிதையும் பெருமையடைகிறது.

ஒரு குழந்தையின்
அழுகையாய் என்னுள்ளே
வார்த்தைகளோடு போராடி
வரிகளாய் வடிவமடைகிறது




கோப்பை நிறைந்த
பதார்த்தத்தில் ஒன்றை அள்ளும்
குழந்தையாய்
என் மனம் ஒரு சில
வார்த்தைகளை தேடி
அள்ளி வரிகளாக்குகிறது

காதலர்களின்
முதல் முத்தத்தின்
உணர்ச்சியாய் உணர்ந்தெழுதும்
இந்த கவிதை - ஏனோ
ஓர் கைம்பெண்ணின்
காம உணர்வினைப்போல
இன்று உணர்ச்சியற்று போகிறது.

கவிதையை ரசிக்கும்
நீயுமருகிலில்லை
எழுதும் கவிதையில்
உன் உயிர் சுமந்த
காதலுமில்லை - ஆனாலும்
கவிஞனாய் நான் மட்டும்
தனிமையில்
என் கவிதையைப்போல.

கவிஞர் தமிழ்,மாயவரம்

# ஹைக்கூ உலகு

## ஹைக்கூ

பறவை பசி
பகிர்தலில் நிறைவடைகிறது
குழந்தை மனம்

## சென்ரியு

இரை உண்ணும் கோழி
மகிழ்கிறது மானுடம்
தன் இரை பார்த்து

## லிமரைக் கூ

உணவு கொஞ்சம்
பகிரும் கைகள்
இல்லை பஞ்சம்

## லிமரிக்

சாணி மொழுகிய தரை
மனதில் இல்லை கரை
கிழிந்த உடை
வறுமையின் விடை
வாழ்க்கை முடியும் வரை

## குக்கூ

திறக்க இயலா
பள்ளிக் கதவுகளின்
கணத்தால்
எளிதாய்
திறக்கும்
அடுப்பங்கரைகள்



## பழமொன்றியு

காற்றுள்ள போதே
தூற்றிக்கொள்
காற்றில்லா போதும்
கனவைக் கொள்

## மோனைக் கூ

அழுக்கு உடை
அழகாய் தெரிகிறது
அவள் மனம்

## எதுகைக் கூ

வெறுங் கைகள்
சிறுமை இல்லை
வறுமை வாழ்வு

## விடுகவிக் கூ

முட்கள் இல்லை
மணி காட்டுகிறது
கிராமத்து வானம்

## மணிக் கூ

நான்
சொல்லை உடைக்கிறது
நாம்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# என் கைப்பேசிக்கு ஒரு கவிதை

என் செல்ல கைப்பேசியுடன்
ஒரு சின்ன உரையாடல்

நீ என்ன மழலையா?
நீ சிணுங்கும் போதெல்லாம் உன்னை
என் கையில் ஏந்திக் கொள்கிறேன்.

நீ என்ன ஆதவனா?
என் ஒவ்வொரு நாளும் தொடங்குவதும்,
முடிவதும் உன்னோடு தான்.

நீ என்ன மாய மானா?
அனைவரும் உன்னை பின் தொடர்கின்றனர்,
ஆனால் நீ யாரிடமும் வசப்படவில்லை.

நீ என்ன வேடனா ?
ஆயிரம் வலை(தளங்)கள் விரித்து வைத்து,
தினமும் யாருக்காக காத்திருக்கிறாய்.

உன் சமுக வலை(தளங்)பின்னல்களில் சிக்கிக்கொண்ட
என்னை காலச்சிலந்தி விழுங்குகிறது.

உன் தொடுதிரைக்கு பின்னால் ஒளிந்துகொண்டு
இந்த சமூகம் யாருடன் கண்ணாமூச்சி ஆடுகிறது.

உன் சமூக ஊடு+அகங்கள் (ஊடகங்கள்) பேசுவது என்னவோ
அடுத்தவர் பற்றிய அகமும் பு"ர"மும் பற்றியே.

ஒரு தலைமுறையையே தலைகுனிந்தே வாழ வைத்த
பெருமை உன்னையே சேரும்.

வாழ்க்கைப் பாலையின் கானல் விற்ற தாகம் நீ.
கண்களை பறிக்கும் வெளிச்சம் நீ.

நேரத்தைத் திருடும் கள்வன் நீ.
முகப்பூச்சு கேட்கும் முகமூடி நீ.

என்னை விட என்னைப்பற்றி உனக்கு அதிகம் தெரியும்.
இத்தனை அறிந்தும் உன்னை பற்றி நான் அறியாதது ஒன்றே.

நீ என் தோழியா? இல்லை எதிரியா?
என் செல்ல கைப்பேசியே!.

கவிஞர் காவியா சண்முகவேல்

# பரண்

இன்றைய கனவில்
ஒரு புத்தகம் வாசித்தேன்



மயிலின் தோகைக்கும் என்
இதயத்துக்கும் உள்ள காதல் போலச்
சில சமயம் இதயத்தைப் பசுமையாகவும்
கண்களைச் சிவப்பாகவும் ஆக்கிடும்
என் மூளையின் பரணில்
விழித்தபடியே ஏடுகள் படபடக்கும்
அந்தப் பிரியமான புத்தகம்!

கனவில் வாசித்து அலறி எழுகையில்
மனைவி இறந்து போகிறாள்
மகன் தன்னந்தனியாக நிற்கிறான்
பிறக்காத அண்ணனோ இறக்கிறான்;

கனவைக் காட்டிலும் புனைவு செய்யும்
கொலைகாரர் உண்டோ இவ்வுலகில்?

மகனையும் மனைவியையும்
ஆறுதலாகத் தழுவக் கை நீட்டக்
கைக்கெட்டாத ஊருக்குப்
பள்ளி விடுமுறையில் சென்ற நினைவு,
மூன்று மணிக்கே உறக்கதைச்
சூரியோதயம் செய்துவிட்டது;

இப்போது சில கொசுக்களுடன்
முதன் முறையாக நட்பு பழகியபடி
மெத்தை மேல் ஒரு மாடு போல
அந்தப் புத்தகத்தோடு தனிமையையும்
அசைபோட்டுக் கொண்டிருக்கிறேன்.

கவிஞர் தயானேஸ்வரன்,வில்லிவாக்கம்,சென்னை 49

# வெயிலில் மலர்ந்த வறுமை

வறுமையின் வாட்டத்தை
வானுலகம் அறியாதோ.
சுட்டெரிக்கும் சூரியனும்
சுடும்மண்ணில் படர்ந்திருக்க.



பசித்த வயிறோ
பாவமாய் தவித்திட.
இளமைக் கோலமே
இல்லாமல் போனதே.

முதுமையின் வாட்டமே
முப்பகலும் விளைந்ததே.
ஏழையின் வயிற்றுக்கு
ஏற்புடைமை காணலியே.

நடுநிசி வெயிலிலே
நாக்கு வறண்டிருக்க.
ஒருவாய் தண்ணீரும்
ஓரளவு கிடைக்கலையே.

இரவின் வேகத்தை
ரம்யமாய் போர்த்திக்கொள்ள.
தெருவே இறப்பிடமாய்
தெய்வமும் மறந்ததே.

செங்கோல் ஆட்சியிலே
செழுமையும் காணலையே.
கதிரவனும் போர்தொடுக்க
காத்தருள நாதியில்லையே.

இனியும் பொறுக்காதே
இன்னலை மறக்காதே.
மறுமலர்ச்சி காணிட
மாற்றமாய் உயர்வாயே.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# வேண்டுதல்கள்

வறுமையின் வலிகளை ஒழித்திடும் திடம் வேண்டும்
பொறாமையின் வழிகளை அடைத்திடும் பலம் வேண்டும்
குழிபறிப்பவர்க்கும் சேர்த்தொரு நல்வழி யமைக்க வேண்டும்
பழிப்பவர் விளித்து நான் பாரினில் சிறக்க வேண்டும்
சீதனம் வேண்டிடும் ஆடவர்ச் சிந்தையை மாற்ற வேண்டும்
சீரிய சமுதாயமாய் மக்களில் ஏற்றம் காண வேண்டும்
மூலையில் முனகிடும் முதிர்க்கன்னிகள் கரை சேர்க்க வேண்டும்
முதுமையில் தனித்தவர்களைத் தேடி இதமாய் உரையாட வேண்டும்
பெண்களைச் சிதைக்கும் வன்முறை மண்ணில் புதைக்க வேண்டும்
திண்ணமாய் நெஞ்சில் வீரம் விளைய வேண்டும்
பாரிலே பாதகம் கலைத்திட உறுதியாய் உழைக்க வேண்டும்
படைத்தவன் அருள்மழை இப்பூமியைத் தினம் நனைக்க வேண்டும்



கவிஞர் மக்கொனையூராள்

# பொம்மலாட்டமான வாழ்க்கை

பொய்யான வையகம் ஒன்று பிறந்ததே
பொல்லாத காலம் நேரம் உருவானதே
பொருத்து இரசிக்க இறைவன் நினைத்தானோ
பொழுது போக மனிதன் ஆனானே

ஆசை கொண்டு மானிடன் ஆனானே
ஆசையில் மூழ்கி இருப்பதை மறந்தானே
ஆசையின் பின்னால் இவனும் செல்லவே
ஆண்டவன் பார்த்து சிரித்துக் கொண்டானே

விதியை படைத்து ஆட்டி வைத்தானே
விதியை அறியா மனிதனும் ஓடினானே
விளையாட்டை இறைவனும் ஆரம்பித்து வைத்தானே
விளையாட்டில் பார்வையாளனாய் மாறினான் இறைவனே

வாழும் காலம் கொஞ்சமென்று அறிந்தும்
வாழ்க்கை பயணத்திற்கு மரணம் முடிவாகியும்
வாழும் மனிதன் ஆசை கொண்டு
வாழ்க்கை சிறக்க கனவு கண்டு



விழுந்து எழுந்து முட்டி மோதி
விதையை வெல்ல திட்டம் தீட்டி
விமர்சனத்தால் பைத்தியம் பிடித்து
விரக்தியுடன் நாளும் பொழுதை கடத்தி

அவதியுடன் நிம்மதியற்று வாழ்க்கையும் செல்கிறதே
அவசர மனிதனை ஆட்டி வைக்கிறான்
அவனது ஆசையால் பொம்மலாட்டமாக ஆடுகிறான்
அவனே இறைவன் என்றும் சொல்கிறான்

கவிஞர் ஜஸீரா ஜலீல்

# வட்ட வட்ட கவிதைகள்

**உன்னை மையமாகக் கொண்ட
வட்ட, வட்ட கவிதைகள்.**

கிணற்று நீராய்
நானிருக்கிறேன்
அடிக்கடித்
தூக்கியெரிந்து
சலனமெற் படுத்தும்
கற்களாய்
நீ இருக்கிறாய் !

கொஞ்சம் கொஞ்சமாக
ஆழ் மனதில்
மூழ்கும் நீ
நீரி(மனதி)ல்
முழுவதும்
அதிர்வை
ஏற்படுத்துகிறாய் !

நீ என்னில்
வந்ததும்
உன்னை மையமாகக்
கொண்ட வட்ட, வட்ட
கவிதைகள்
என் மேல்
எழுதப் படுகின்றது

எப்போதோ
காயமேற்படுத்திய
நினைவுகளின்
கற்களை
என் உள்ளத்தின்
ஆழத்தில்
ஒவ்வொன்றாய்
சேர்த்து வைத்திருக்கிறேன்

அன்று
கூர்மையிருந்து
சேதப் படுத்திய
வெட்டுக் கற்கள்
காலச் சக்கரத்தின்
இயக்கத்தில்
இன்று
கூழாங்கற்களாய்
மாறியிருக்கிறது

கவிஞர் இரா.மதிராஜ்

# தன்னிலை

## தன்னிலை

நம் பொருளாதாரத்திற்கும்
அகங்காரத்திற்கும்
உள்ள இடைவெளியே
நமது வாழ்நிலையை தீர்மானிக்கிறது.

## கேள்வி குறி

உன்னை சிலையாக வடித்த இறைவன்,
என்னை ஏனடி அசையாமல் நிற்க செய்கிறான்?



கவிஞர் மரு.சு.டேனியல் ராஜ சுந்தரம்,வீரிருப்பு,சங்கரன்கோவில்

# மாதரே

விடுகதையான
வாழ்க்கையில்
விடை தேடும்
விட்டில் பூச்சிகள்!
வியப்பாய் இருக்கிறது
விழியாய் காப்போம்
வழியாய் மாறுவோம்
விந்தை புரிவோம் !
விவாகம் செய்வோம்
வீண்வாதம் தவிர்ப்போம்
விதியை வென்று சந்ததி
காப்போம்!
விலையில்லா வாழ்வில்
விடையாக மாறி
விந்தை உலகம் படைப்போம்
வீர மங்கைகளாக!
வீர் கொண்டு எழு!
வீழ்த்துவதற்கு அல்ல!
வீழ்ந்து விடாமல்
வான்வெளியில் செல்ல!
வானுலகம் வாழ்த்துக்கள்
சொல்ல!
வெற்றி மாதராய் தலை நிமிர்ந்து
நிற்போம்!



கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# அன்பு

அள்ள அள்ளக் குறையாது
கிள்ளிக் கொடுத்தாலும் தீராது
அள்ள அள்ள வளர்ந்துக் கொண்டே இருக்கும்

மல்லிகைப்பூ போல்
மணந்து கொண்டே இருக்கும் அன்பு!

கள்ளிச் செடிகள் போன்ற கடின மனதையும் மாற்றும்
பாறைப் போன்ற கல்லான இதயத்தையும் கரைக்கும்



அகிலத்தை ஆளும் மாபெரும் சக்தி
எதிரியும் எதிர்ப்பும் இல்லாத சக்தி
மனிதனை புனிதனாக மாற்றும் கோயில்!
அன்பு! அன்பு!
அனைவருடனும் அன்பாக பழகுவோம்!
ஆறுதலான வார்த்தைகளை அன்பாகக் கூறுவோம்!

கவிஞர் அ.இராபர்ட்கென்னடி,கானூர்

# துறவு

(அதிகாரம் : 35)

எப்பொருளில் கொண்ட
பற்றானது அறுக்கப்படுமோ.
அப்பொருளால் ஒருவனுக்கு
துன்பமென்பது இல்லையாம்.

துன்பமற்ற வாழ்க்கையை
விரும்பிடும் ஒருவன்.
ஆசைதுறந்திடத் துணிந்தால்
எல்லாமின்பமே இவ்வுலகில்.

ஐம்புலனாசை அறுத்து
அடக்கி வெல்லும்போது.
அடிப்படையாம் பொருளாசையும்
அறுந்திடல் முறையே.

பொருளில் ஆசையற்றிருத்தலே
தவநெறியின் இயல்பாம்.
ஆசையுள்ளதெனில் அதுவே
உலகபோக மயக்கமென்பதாம்.

பிறவித்துன்பம் விடமுயல்வோர்க்கு
உடலென்பது மிகைப்பொருளாம்.
எனிலெதற்கு வேற்றாசைகளில்
நாட்டம் கொண்டலைதலோ?

உடலை யானென்றும்
பொருளை எனதென்றும்.
நினைக்கும் மயக்கமறுப்போன்
வானோரிலும் உயர்வடைவான்.

பொருட்பற்றை இறுகப்பற்றி
ஆசைகளை அறுக்காதவரை.
துன்பங்களும் விடாமல்
பற்றிக்கொண்டு கொல்லும்.

முற்றுந்துறந்தோரே மேல்நிலையினர்
மற்றையோர் எல்லாம்.
பற்றென்ற ஆசைவலையில்
அகப்பட்டுக் கொண்டோராவர்.

இருவகைப் பற்றுகளும்
அறுந்துபோன அந்நிலையே.
பிறவித்துன்பம் ஒழித்து
இவ்வுலக நிலையாமைதரும்.

உலகப்பற்றை விட்டொழித்து
நிலைவாழ்வு பெற.
இறைப்பற்றை பற்றிக்கொண்டு
எப்போதும் விடாமலிருந்திடு.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# அம்மா

வளரும் வரை அப்பாவுக்கு
செல்லப்பிள்ளை
வளர்ந்த பிறகு கணவருக்கு
தாரமாகி
பெற்ற பிள்ளைக்கு
இன்பத்தை மட்டுமே அமுதாகக் கொடுத்து
கஷ்டத்தில் கணவருக்குத் துணை நின்று
காலம் கடந்து வயதானாலும்
இறுதி மூச்சு வரை
நடமாடும் தெய்வம்
அம்மா.



கவிஞர் மு.கணேஷ்,சேலம்

# உயிர்மெய் உரம்

அறிவுக்கு உரமிட்டால்
அகிலத்தையும் வெல்வாய் நீ!

ஆணவத்தைக் கருவறுத்தால்
ஆகாயத்தை வசமாக்குவாய் நீ!

இன்முகம் நீ பூண்டால்
இடும்பரால் போற்றப்படுவாய் நீ!

ஈன்றவளது மனம் வென்றால்
ஈடணம் சேர்ப்பாய் நீ!

உன்னை முழுமையாய் நம்பினால்
உதயமாகும் ஆதவனாவாய் நீ!



ஊகையதை உள்ளங்கையடக்கினால்
ஊர்வாய் பூட்டுவாய் நீ!

ஒருவரையும் ஒதுக்காமல் வாழ்ந்தால்
ஒற்றுமையின் இலக்கணமாவாய் நீ!

ஓர் நாளும் மாற்றாரை குறைகூரேல்
ஓங்குவாய் சிகரமாக நீ!

ஔவித்தல் நீக்கினால்
ஔடதமற்று வாழ்வாய் நீ !

கவிஞர் சரண்யா விக்னேஷ்குமார்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# வளரும் நினைவுகள்

நான் மீண்டும் செல்லத்துடிக்கின்ற ஆற்றங்கரையில்தான்
இருகரைகள் கரங்கள் நீட்டிக் கொண்டிருந்தன
நான் வரும் வரை எனது நீந்தல்களை
நீந்திக் கொண்டிருந்தது மீன்.

நீன் விரட்டிய நாய்க்கூட்டங்களின்
குட்டிகள்தான் வீட்டுக்கு வீடு
பாதகாப்பு பொம்மைகளென
அன்பு சங்கிலியால்
பெயர் வைத்து அழைத்து அடைக்கப்பட்டிருந்தது.

ஒரு சொட்டு மழை விழாமல்
ஒதுங்கிய பள்ளிக் கட்டிடத்தில் தான்
மழைநீரை சேகரிக்க பரிந்துரை செய்த
புகைப்படங்கள் வரையப்பட்டிருந்தன.

நான் பயந்தோடிய பழைய தமிழ் தாத்தா
உண்மையாகவே திருவோடேந்தி
தாத்தாவாகவே காட்சியளித்தார் ரயில் நிலைய புறத்தில்.

ஆசைதீர கொஞ்சி விளையாடிய
சக உடன்பிறப்புகள்
அவரவர் புறம்பார்த்து சென்றிருந்தனர்.

இன்றும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள்
அப்பாவின் புகைப்படமருகில்
மொத்தத்தை இறக்கி வைத்த பல அம்மாக்களும்,
வாழ்க்கையே இழந்து
தடியைப் பிடித்து நடுக்கல்களின் வாசல்களில்
எட்டிப்பார்ப்பில் பல அப்பாக்களும்.

எனது வீட்டுக் கதவென்னவோ
இன்றும் திறந்தேதான் இருக்கிறது
அப்பா அம்மா இல்லமென ஒலித்துக் கொண்டே.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# பெண்ணின் வலி

கனவுகளைத் தொலைத்து
இலட்சியங்களை மறந்து

எண்ணங்களை ஒழித்து
ஆசைகளை அழித்து

உணர்வுகளை மறைத்து
நினைவுகளைக் கலைத்து

விருப்பங்களை இழந்து
வலிகளை சுமந்து

பல துயரங்களைக் கடந்து
திரும்பினால்

எதுவும் தனக்கானதில்லை
என்பதே "பெண்ணின் வலி நிறைந்த வாழ்க்கை!"



கவிஞர் அகல் தாமரை "கவி",கமுதி

# ஆதவமதி

ஒருநாள் உன்னுடன்
நானும் இருந்திடுவேன்

உன் வெப்பத்தை
எனதாக்கி அதிலும்
மிளிர்ந்திடுவேன்

ஆகாயத்தின்
உச்சியில்
நீ இருக்க

அழகன் உனை காண
நானும் தோன்றிடுவேன்
அந்த உச்சி பகலில்



நீயும் நானும் ஒன்றாய்
இருக்கும் தருணமதை

ஊரார் பார்த்து
ரசிக்க வைத்திடுவேன்

நான் கொண்ட காதலை
மொழியின்றி உனக்கு
உணர்த்திடுவேன்

இரவில் நிலவு
அழகென்றால்
பகலவனுடன்
நிலவு கொள்ளை
அழகு.

கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# வாழ்த்து அட்டை (ஓலை)

வாழ்த்து அட்டைகள்
வழியே வாழ்த்துகளை
பகிர்ந்த போது இருந்த
மகிழ்ச்சி - புலனத்தில் பகிரும்
போதும் இல்லை.

வாழ்த்து அட்டைகள்
வாங்குவதற்காக அங்காடிகளை
தேடி அலைந்த நாளில்
இருந்த மகிழ்ச்சி
இன்று இல்லை.




தொலைவில் உள்ள உறவுகளை
தொடர்வதற்கு வாழ்த்துஅட்டை
துணை நின்றன ஆவணமாக!

அலைவழி அளவளாவு
அகமகிழ்வு செய்யவில்லை !
அயர்ச்சியை வழங்கியது!

வாழ்த்து அட்டையே மீண்டும் வா
வறண்டு போன நாள்களை
வண்ணமயமாக மாற்ற வா.

கவிஞர் செ.தமிழ்நேயன்

# மாற்றம்

வாழ்க்கை என்பது மாற்றத்தின் ஓட்டமே
வாழ்நாள் முழுவதும் மாற்றத்தின் நாட்டமே

சிறுகுழந்தை முதல் வயோதிபம் வரையே
உருவை மாற்றும் பருவ மாற்றமே

அதனுடன் சுழலும் காலச் சக்கரமே
அங்கே பருவ கால மாற்றமே

இரவும் பகலும் நாளின் மாற்றமே
இலையுதிர் வசந்தங்கோடை மாரிகால மாற்றமே

மனித அகங்கள் குரங்காய்த் தாவியே
மறுகணமே மாறிடும் சிந்தை மாற்றமே



உறவைப் பகையாக்கிப் பின் திருந்தியே
உற்றாரைத் தேடும் சூழ்நிலை மாற்றமே

இயற்கை செயற்கை பாகுபாடு இல்லையே
இயங்கும் மாற்றம் ஒன்றே மாறாததே

இசைவாய் நாமும் அசைவோம் இங்கே
இனிய நல்ல மாற்றம் நாடியே

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)

# நிழலாக தொடரும் நினைவுகள்

விலகிய பாதைகள்
விரல் சொடுக்கித் திருப்ப
கடந்து போன கதையிதுவென
கலைந்து போகாத தடங்கள்



உரசிடும் வெய்யிலுக்கு
நீர்மோரின் சுவைக்கு
தத்திதாவும் மனமும்

மாட்டி வண்டியின்
சல்சல் சத்தத்தோடு
திருவிழாக் காலங்கள்
கூண்டு வண்டியின் கூடாரம்

அன்று
அடைக்கபடாத கதவுகள்
அகன்று வரவேற்கும்
பக்கத்துவீட்டு சுண்ட குழம்பின்
மணம் ஆஹாவென்று
ஆழ இழுத்துப் போகும்

அடுக்களைப் புகையொரு
கவிதை வாசித்துப் பழகியது
சாளரத்து கம்பிகள்
அதிகாலை ஒளியோடு
உரையாடும் அழகும்

சாணக்கரைசலின் மணம்
வைகறை வாசலை வரவேற்று
கோலத்தைப் பரிசாக்கிய
ராகங்கள்

ஒடுகின்ற வாழ்க்கையில்
கிடுகிடுவென நாட்களின்
நகர்வில்

கனவென மறைந்து
நிழலாய் தொடரும்
நினைவுகள்

தொலைந்த சுகந்தங்கள்
தொடாத தூரத்திலே
வானம் மட்டும் மாறாது
மடிவிரிக்கும் மகத்துவம்

மாறாத இயற்கையோடு
மனம்விட்டு பேசுகையில்
கைத்தொடாத தூரத்தில் நான்
கவிதையாக மின்னுவேன்
என்று கண்சிமிட்டியது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# இதயத்தை இசைப்பவள்

எங்கிருந்தோ இசைக்கிறாய்
துடிக்கிறதென் இதயம்
நினைக்கும் நிமிடம் தோறும்
நீ விடும் மூச்சு என்னுள்

கொஞ்சிப் பேசும் கண்களில்
பொய்யும் கொஞ்சம்.
அறிந்தும் பூக்கிறாள்
கொஞ்சம் பார்த்ததும்

காற்றில் மிதக்கும்
பூவாசம் போல
இவன் நாசிவழிப்
பேசிக் கடக்கிறாள்

பேச்சுக் காற்றில்
வாடாதவள்
மூச்சுக் காற்றில்
மொழியிழந்தாள்

விடிவதற்குள்
இவன்பாடு
திண்டாட்டமே.



கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை

# சேலை

நீ இழுத்து பிடித்து
இடையில் செருகும்
சேலையின் மடிப்பில்
சுருண்டு போகுதென்
இதயம்!
கடைக்கண் பார்வையில்
கருணை காட்டிடடி
என் ஆருயிர் காதலியே!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# வைத்திய வெண்பா

## சளி இருமல் காய்ச்சல்



ஆடா தொடையென்றால் ஆடித்தான் போகுமாம்
பாடாய்ப் படுத்தும் பலநாள் சளியும்
இலையுடன் மஞ்சளும் இஞ்சியும் காய்ச்சித்
தலைவலி காய்ச்சலுக்கும் தா

## வறட்டு இருமல்

இடித்தமஞ்சள் இம்புட்(டு) இளஞ்சூட்டுப் பாலில்
பொடித்த மிளகும் படுக்கப்போ கும்முன்
குடித்துவந்தால் வாட்டும் வறட்டிருமல் தீரும்
படுத்தெழுந்துப் பார்த்திடும் போது



கவிஞர் கவிதா சீனிவாசன்

# பொன்செய்

காதலுற்றான்
காதலுற்றேன்
உன்னிலும்
என்னிலும் ஆயிரம்
பொருந்தாங்கள்
அன்புக்கு அளவில்லை!
அன்பு கடல் அவள்
அன்பு மன்னவன் அவன்
காதலன்
செயல் வருத்தம் அளிக்கும்
காதலித்த போது
பேதை நெஞ்சு
அறியவில்லை
கணவன் ஆனாவன்
வேலை பளுவால்
பேச முடியாமல்
போகும் என்று
பேதை காதலி அறியாமல்
இப்போ மங்கை ஆகி
வருந்துகிறாள்!
அன்பில் துன்பமாக.
பிரிவின் வலியாக
பசலை நோய் கொண்டு.



கவிஞர் சி.சிவப்பிரியா,பொன்செய்

# மலர்கள்

ஆதவன் வரவிற்காக மலர்ந்து
புன்னகை சிந்தி காத்திருக்கும்
காதலி நீயே.
குவிந்திருக்கும் இதழ்களுக்குள்
என்ன நடக்கிறது.
பிரிந்தால் சேர முடியாது என்றெண்ணி
பிணைந்து இருக்கிறாயா.
கொய்யப்படுவோம் என தெரிந்தும்
தன்னலமின்றி, மலர்ந்து சிரித்து
மணம் வீசி, மகிழ்ச்சியைப் பரப்பும்
தேவதையும் நீயே.
பாகுபாடின்றி பறிக்கும் கைகளில்
புன்னகை சிந்துகிறாய்,
மடிந்தாலும் மணம் வீசி, மனதில்
நிறைகிறாய்.
தன்னலமின்றி வாழும் வாழ்க்கையை
அழகாய் கற்பித்துச் செல்லும்
தேவதை நீயே!




கவிஞர் சாந்தி,காங்கயம்

# நெஞ்சோடு கலந்திடு

என் நினைவில்
உலா வரும்
உயிரே.

ஓய்வில்லா நினைவுகளுடன்
ஒப்பந்தம் செய்திட
ஓயாமல் வருக.



ஒப்பற்ற நினைவுகளுக்கு
ஒப்பனை தீட்ட
ஒன்றிணை எந்நெஞ்சில்

விண்ணளவு காதல் செய்ய
விண்ணப்பம் செய்கிறேன்
விரல் இணைய தருக.

மீண்டுமொரு அழியா
காதல் இலக்கணம்
வகுக்கலாம் வா.

பாதாளகுகை எந்நெஞ்சமதில்
பாவையுனது பார்வையால்
ஒளி பரவச் செய்.

என்னிளமனம் மகிழ்ந்து
தோகைவிரித்து குதித்தாட
காதல் செய்.

சுவர்க்க மோட்சமடைய
என்னிலத்தில்
மென்பாதமுனதை படரச்செய்.

கவிஞர் மு.அமானுல்லாஹ்,செங்குன்றம்

# உலக நீர் தினம் (மார்ச் 22)

நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்
இன்று அமையாது ஒழுக்கு.
தெய்வ புலவரின் வான் சிறப்பில் உயிர் இனங்களினால்
அமிழ்தம் என்றும், உண்ணும் உணவும் அதுவே என்றும்,
மழை இல்லாது போனால் வானோர்க்கு எடுக்கும் விழா
நடக்காது என்றும், ஆகாயத்தில் இருந்து நீர்த்துளி
விழவில்லையானால் ஒரு பசும்புல் கூட முளைக்காது
நீரின்றி அற ஒழுக்கமும் நிலை பெறாது என்கிறார்.
உலகில் நீரின் வளமை குன்றினால் மூன்றாம் உலக
போரும் நடக்கும் என்கிறார்கள் வல்லுனர்கள்.
வரும் முன் காப்போம் என்ற அடிப்படையில்
தண்ணீரை, மழைப் பெய்யும் போது சேகரித்து
பயன்படுத்தும் முறை கட்டாயமாக்கியும்,
மழை நீர் தொட்டியை வீட்டுக்கு வீடு வைத்து
நீரை சேகரிப்போம். நீரினால் மின்சாரம் உற்பத்தியும்,
இன்றைய நாளில் நாம் செலவழித்த நீரை
எப்படி சேகரிப்பது? மழை பெய்யும் போதும்
சேகரித்தாலும், சிக்கனத்தாலும் மட்டுமே
இது சாத்தியமாகும்.
நீர் இல்லையானால், விவசாயம், தொழிற்சாலை
குடிநீர் இவையாவும் அற்று போகுமே,
இன்றளவும் சென்னை வீராணம் ஏரி
பராந்தக சோழனால் கட்டபட்டும்,
அக்காலத்தில் ஆயிரக்கணக்கான ஏரிகள்
உருவாக்கம் செய்யப்பட்டன.
காவிரி நீரை, கல்லணை கட்டிய கரிகாலச்
சோழன் வங்காளத்திற்குச் செல்லாமல்
தடுத்து தமிழ் நாட்டை செழிப்படைய செய்தான்.
வருங்கால தலைமுறையினருக்கும் இக்கால
நமக்கும் தண்ணீரின் தேவையை உணரச் செய்தும்
குழந்தைகளுக்கு இப்போதிருந்தே நீரின் சிக்கனத்தை
வலியுறுத்தி நாடும், வீடும் நலம் பெற
உன்னத வாழ்வை வளம் பெற வாழ்வோமாக!



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# உள்ளமே கோவிலாய்

மனதினில் உள்ள
கோபங்களையும்
குரோதத்தையும்!

வெறுப்புகளையும்
வீராப்புகளையும்!

ஆத்திரத்தையும்
அகங்காரத்தையும்
விட்டொழித்து!

அன்பும் பண்புடனே
பாசமும் நேசமுமாய்!

அனுசரித்து
வாழ்ந்திட!

உள்ளமே
கோவிலாய்
மாறிப் போகுமே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# அறம் எனப்படுவது

அன்னாபிஷேகம் பாலாபிசேகம் செய்வதைவிட அன்னமிடுதலும்
ஆலயங்கள் கட்டுவதைவிடப் பள்ளிகள் கட்டப்படுவதும்
இயற்கையை அழிப்பதைவிட வருங்காலத்திற்குப் பாதுகாப்பதும்
இந்தியை எதிர்ப்பதைவிடத் தமிழ்ப்பற்றே வளர்ப்பதும்
ஏழையின் சிரிப்பினிலே இறைவனைக் காண்பதும்
நல்லறம் நவிலும் நற்செயல் கூற்றே

காலம் தாழ்த்துவதைவிட அன்றே செய்வதும்
கையூட்டு பெறுதலைவிட ஊதியத்தில் வாழ்தலும்
கல்விக் கொள்ளையைவிட இலவச கல்விப்பணியும்
கோடிகளில் புரள்வதைவிட இயன்றவரை ஈதலும்
கலங்கி நிற்பதைவிடத் தன்னம்பிக்கையுடன் போராடுவதும்
நல்லறம் நவிலும் நற்செயல் கூற்றே

பகை வளர்ப்பதைவிட எதிரியையும் நேசிப்பதும்
பலபோதை தேடுவதைவிட புகழ்போதைக்கு அடிமையாவதும்
பிறன் மனை நோக்கா பேராண்மையும்
பெண்ணடிமை செய்வதைவிட சமஉரிமை தருவதும்
பணமில்லை எனினும் மாறாத நற்குணமும்
நல்லறம் நவிலும் நற்செயல் கூற்றே



நாடகக் காதலைவிடத் திருமணத்தை நாடுவதும்
வறுமையிலும் தாழாது செம்மையாக வாழ்வதும்
வாக்குகளை விற்பதைவிட நற்தலைவனை உருவாக்குவதும்
மருத்துவத்தை வணிகமயமாக்காமல் சேவை செய்வதும்
மற்றவரைக் கைகாட்டுதலைவிடத் தன்னொழுக்க தழுவலும்
நல்லறம் நவிலும் நற்செயல் கூற்றே

கவிஞர் பா.இராஜசேகர்,சிதம்பரம்

# மனமெனும் நல்லாள்

மொழியும் சொல்லுக்குள்
முகங்கள் தெரியுமென
உணர்த்திடும் எண்ணங்களில்
ஒளிந்து கிடக்கிறது மௌனம்.
விரியும் எழுத்துகளில்
விளைந்திடும் நம்பிக்கைக்குள்
வெளிச்சமிடுகிறது எதிர்காலம்.
கரங்களின் பிணைப்பினில்
பரவிடும் கனவுகளுக்குள்
பெரிதாகட்டும் உலகம்.
அன்பினில் நுழைந்திடும்
கருணையின் வாசல்களில்
செல்வமென நற்பண்புகள்
புதையலாய்க் குவியட்டும்.
மனம் எனும் நல்லாள்
மாண்பினில் சிறந்திட
காலடிகள் எங்கும்
கலங்கரை விளக்கங்களே.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# "யுகாதி" தெலுங்கு ஆண்டுப்பிறப்பு

தெலுங்கர்கள் தம்ஆண்டுப் பிறப்பதனை" யுகாதி"யென்பர்!
கர்நாடகம் மஹாராஷ்ட்ரம் ஆண்டதனின் பிறப்புமீதே!
சாந்த்ரமான அணுகுமுறை ஈதாகும்! பிரம்மனவன்
பூமிதனை படைத்தநாளும் இதுவென்பர்! யுகாதிநாளில்
ஆலயங்களில் ஆஸ்தானம் நிகழ்ச்சியாகும்! பஞ்சாங்கப்
படனத்தை நிகழ்த்துவரே! அவரவரின் ஜாதகத்தை
அறிந்திடலும் வழக்கமாகும்! பகவானுக்கு நிவேதநமாய்
போளியொடு புளிஹோதரை பால்பாயஸம் படையலதை
ஏழையர் எளியோர்க்கு வழங்கியபின் தாம்கொள்வர்!
இந்நாளின் சிறப்பானது யுகாதியின் பச்சடியே!
சுவையனைத்தும் சேர்ந்தததே! வாழ்வினிலே இன்பதுன்பம்
கரிப்பு துவர்ப்பு கலந்திருக்கும் என்பதனை உணர்த்திடுமே!
யுகாதிபப்பு தோசகாய பச்சடியும் மம்மிடிகாய
பப்பதுவும் ஒப்பட்டுச் சாருமென்று வங்காய
கசகசால கூரபொப்பம் செகோடிலு நிப்பட்டு
நற்பெல்லம் பரமான்னம் சகுபிய்யம் பாயசமும்
புனுகுலுவும் கோங்கூரா ஆவக்காய் மம்மிடிகாய
புளிஹோதர இத்யாதி பிறர்க்களித்து தாம்சுவைத்து
நன்மகிழ்வு எய்தலாமே! சுற்றத்தார் நட்பினர்கள்
சூழ்ந்துண்ணும் ஸந்தோஷம் கிட்டிடுமே! புத்தாடை
பூணுவதும் அணிகலன்கள் சூடுவதும் மட்டற்ற
மாக்களிப்பு மண்டிடுமே! வான்நிலவின் அடிப்படையில்
ஆண்டுமாதம் கண்டிடுவர் இஸ்லாமியர்! சுந்தரஞ்சேர்
தெலுங்கினிலே பாடலொடு ஆடலதும் மாதரார்கள்
இளையோரும் மூத்தோரும் மூதின்பம் கொண்டிடுவர்!
ஆந்திரத்துச் சாயலிலே உடுத்துமகிழ் நிகழ்வுகளும்
கண்டிடுவர்! ஆலயங்கள் சென்றங்கு மாணிறைவன்
பூசனைகள் ப்ரசாதங்கள் ஏற்றிடுவர்! பற்பலரின்
சந்திப்பு நலன்உசாவல் இன்னவைகள் இந்நாள்போல்
எந்நாளும் அமைந்திடவே இறையருளை வேண்டுவமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# பெற்றோரை காக்கனும் பிள்ளைகளே

பெற்றோரை காக்க வேணும் பிள்ளைகளே
பெற்றோரை மதிக்க வேண்டும்பிள்ளைகளே நீ
கற்ற கல்வி போல் தான் அவர்களுமே
பெற்றெடுத்து தினம் உங்களை காத்தவரே

காலமும் அவர் உழைத்து உங்களையும்
கருத்தாக பார்த்தாரே வளர்த்தாரே உங்கள்
வளர்ச்சியிலே நிறை கவனம் கொண்டவரே
வாழ்நாள் முழுதும் தியாகங்கள் பலவும் செய்தவரே

உன்னைக் கண்டு மகிழ்ந்தே அவர் சிரித்தார்
உன் பாதையை அவரே தந்து. அங்கு உயர்ந்தார்
உன் மனசுக்குள் அவர்களை வைத்து விடு
என்றும் அவர் துணையே உனக்கு நன்று

புத்தகம் போலே அவர் நிலைமையே நீ
புரட்டிப் படித்தால் அதன் வலி தெரியுமே
அத்தனையும் அது உனக்கு வழிகாட்டும்
எத்தனை கஷ்டம் வந்தாலும் அது உன்னை மாற்றும்

புத்தகம் என நினைத்து தூக்கி போடாதே
கீதையை போலே
நித்தம் பாதுகாக்கும்
புத்தகம்
நித்தம் ஒரு பக்கம் நீ படித்தால் தெரியும்
உன்னுடைய அத்தனை வளர்ச்சிக்கும்
அதுவே முதல் இடம் தந்திருக்கும்



கவிஞர் அஞ்சல் தஞ்சைதாசன்,சென்னை-600 110

# கவிதை

காதலைச் சொல்ல கவிதை!
காதல் நொறுங்கியதை சொல்லவும் கவிதை!
புலவனும் வறுமையும்
புரவலனும் செல்வமும் கவிதை!

கலங்கிய மனதை தேற்ற கவிதை!
உற்சாகத்தை ஊட்டக் கவிதை!
உணர்வுகளை தட்டியெழுப்பக் கவிதை!
சமூகத்தை கட்டியெழுப்பக் கவிதை!

நக்கல் நையாண்டிக்குக் கவிதை!
வீரம் விவேகத்திற்கு கவிதை!!
வாழ்த்தவும் கவிதை!
வசைபாடவும் கவிதை!




இறைவனைப் பாட கவிதை!
அவனிடம் இறைஞ்சவும் கவிதை
அறம் பொருள் இன்பத்திற்கு கவிதை
அர்த்தம் பொதிந்த பார்வை கவிதை

இலக்கை விளம்ப கவிதை
இப்படியானது என சொல்லக் கவிதை
புன்னகைப்பவனே ஒரு கவிதை
வாடிய முகத்தைக் கண்டால் வாடுபவன் ஒரு கவிதை

கழுத்தளவு பிரச்சினையிலும்
கவிதையே நல்மருந்து
கவிதையே நல்விருந்து
கவிதையே சுவாசம் கவிதையே சுகவாசம்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு,திருச்சி

# எங்கெங்கும்! (உலக சிட்டுக்குருவிகள் தினம்)

உந்தன்குரலோசை ஒலிக்கட்டும் எங்கெங்கும்!
அதிகாலைப் பொழுதில் உந்தன் குரலோசை
துதிபாடி எழுப்புவதாய்த் தோன்றிடுமே நாள்தோறும்!
உன்னிடம் சேதிசொல்லிய பாடல்கள் பலவுண்டு!
உன்னைப் போல் பறந்தோட உள்ளத்தில்
எந்நாளும் ஆசையுடன் ஏங்கினானே பாரதியும்!
சின்னத் தலைக்கேற்ப கண்ணிரண்டும் அழகூட்ட
சிறுதானியம் போன்றதொரு அலகுடனே, வெண்மையும்
கருமையும் கலந்த நிறத்தில் பட்டுப்போல்
முதுகு, வெள்ளைக் கழுத்து, சிறியதொரு தோகை
துளித் துளியாய்க் கால்களென உடலமைப்பு!
தெளிவான முகத்துடனே விடுதலை உணர்வுடனே
இணையோடு சேர்ந்து அற்புதமாய்க் கூடமைத்து
முட்டையிட்டு மூவைந்து நாட்கள் அடைகாக்கும்
பெண்குருவி ! இன்பமான வாழ்வு இவ்வினத்திற்கே!
பசரீன்கள் குடும்பத்தைச் சார்ந்தது இப்பறவை!
பதிமூன்று ஆண்டுகள் வாழ்கின்ற பறவையினம்!
இரண்டு தசாப்தங்களாய் அருகிவரும் இனமிதுவே!
கூரைவீடுகள், பரண்கள், மாடங்கள் இல்லாமை,
சிறுதானிய உணவுகள் கிடைப்பதில் சிரமங்கள்
மரங்களை வெட்டுதல், பூச்சிக்கொல்லி பயன்பாடு
பெருகிவரும் செல்பேசிக் கோபுரத்தின் கதிர்சவீச்சு
இவையெல்லாம் இவ்வினம் அருகிடக் காரணங்கள்!
ஒவ்வோர் ஆண்டும் மார்ச் இருபதை
உலக சிட்டுக்குருவிகள் நாளாகக் கொண்டாடுகின்றோமே!
செடி,கொடி மரங்களை வளர்த்திடலாம் தோட்டத்தில்!
இயற்கை உரமிடலும், இயன்றவரை மாடிகளில்
தானிய வகைகளையும், தண்ணீரும் வைத்தாலே
அழிவிலிருந்து காத்திடலாம் அருகிவரும் இவ்வினத்தை!
அடுத்துவரும் தலைமுறைக்கு எடுத்துரைப்போம் பெருமைகளை!
பாடித் திரிவதை பார்த்து மகிழ்ந்திருப்போம்!




**கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி**

# ஆளப்பிறந்தவர்கள் நாங்கள்



தாய் வயிற்றை எட்டி உதைத்து
அடம் பிடித்து உலகைப் பார்த்து
சொல் பேச்சு கேட்டு வளர்ந்து
கல்வி கடலில் கால் பதித்து
அல்லும் பகலும் தினம் முயன்று
நல்ல புகழ் பல பெற்று
வாழ்க்கையை நகர்த்தி மகிழ்கிறோம்! ரசிக்கிறோம்!
பாச மழையை பொழிவதாய் நடித்து
பின்னால் எம் சதையைக் கிழித்து
குற்றம் சாட்டி மனதை உடைத்து
கண்ணீர் துளிகளை வரவழைத்து
வேதனை தர முயற்சிக்கின்றனர்! பரிகசிக்கின்றனர்!
பிறர் பேச்சை நிதம் கேட்டு
மாய வளையில் சருக்கி விழுந்து
அழுது முடங்கும் கோழைகள் நாமோ?
நினைத்திட வேண்டாம்! ஆளப் பிறந்தவர்கள் நாங்கள்.

கவிஞர் ஹம்னா அக்பர்,இலங்கை

# கலிய நாயனார்

பேருலகில் ஓங்கி புகழ் பெற்ற தொண்டை  நாடு
நீரை தலையில் சுமந்த கங்கை நாதன் வாழும் நாடு.
காருலவும் மலர் சோலைகள் புடை சூழ்ந்த நாடு
தேருலவும் அகல நெடு வீதிகள் நிறைந்த திருஒற்றியூர்

திருப்பதிக பாடல்கள் ஓதும் மண்டபங்கள் அமைந்த ஊர்
அருமை நடன மகளிர் நாட்டிய அரங்குகள் கொண்ட ஊர்
திருவிழாக்கள்   மகிழ்ந்து கொண்டாடும் மக்களின் ஊர்
அரும்  பசி நீங்க  அன்னதானம் வழங்கும் திருஒற்றியூர்

மேகத்தின் முழக்கமும் , கடல் அலை ஓசையும்  கேட்கும் ஊர்
ஏகத்துக்கும் முழங்கும் வாத்தியங்களின் ஓசை ஒலிக்கும்  ஊர்
தேகத்திற்கான பவளம், முத்து, இரத்தினங்கள் விற்கும் ஊர்
வேகமாக ஓடும் இரதங்கள் பூட்டிய குதிரைகள் தடதடக்கும் ஊர்

செக்கார் வாணிப  மரபினர் வசிக்கும் சக்கரபாணித் தெரு
அக்குலத்தின் செய் தவத்தால் அவதரித்தவர் கலி நீதியார்
மிக்கூர்  பெரும் செல்வந்தரான தைல வியாபாரியாவார் இவர்
முக்கண் இறைவர்க்கு திருத்தொண்டு செய்யும் நெறியாளர்



திருஒற்றியூர் கோயில்  உள்ளும் புறமும் திருவிளக்கு ஏற்றுவார்
திருவிளக்கு பகலில் சூரிய ஒளியை மிஞ்சும்  அழகில் மிளிரும்
இரவில் பவனிவரும் நிலாவின் கண்கள் கூச  மறைந்தோடும்
வரும் வருமானம் முழுதுவதுமே  விளக்கேற்றவே செலவிட்டார்

எண்ணில் திரு விளக்கு நெடுநாள் எல்லாம் எரிந்துவரும் காலை
புண்ணிய மெய்த்தொண்டர் புகழ் புலப்படுத்துவார் நோக்கில்
மண்ணில் அவர் பெயர் என்றும்  நிலைத்து நிற்க வேண்டி , சிவன்
உண்ணிறையும் பெரும்செல்வம் தேய்பிறையாக சரியச் செய்தார்

குன்றுபோல் குவிந்திருந்த  வணிகமும் செல்வமும் குறையக் குறைய
என்றும்போல் அவர் பணி குறைவின்றி தொண்டாற்றி வந்தார்
இன்று செல்வமும் குறைந்தது வியாபாரமும் படுத்துவிட்டது
அன்றில் தோகை இழந்து மொட்டையானதுபோல் ஆண்டியானார்

செல்வம் தேய்ந்து அழிந்த பின்னும் திருத்தொண்டு தொடர்ந்தார்
நல் தைலம் வாங்கி விற்று வந்த வரவில் தம் தொண்டு தொடர்ந்தார்
செல்வம் அவரிடத்தில் நிற்காமல் சென்றது  . வறுமையில் தள்ளியது
நல்லது செய்தே வாழ்ந்தவர் , அல்லல் பிறவியில் அல்லலுற்றார்

கிடைத்த  வேலைக்குச் சென்றார் செக்கிழுத்து எண்ணெய் ஆட்டினார்
படைத்தவன் தன்னை சோதிக்கும் நேரம் மனம் தளராமல் உழைத்தார்
விடை தெரியாமல் கூலி வேலையானாலும் விடுவதில்லை விரும்பி செய்தார்
கடை வீதியில் வேலை இழந்து தன் வீடு பொருள் அனைத்தும் விற்றார்

வேறு வழி இல்லாமல் மனைவியை பொது இடத்தில் ஏலம் விட்டார்
மறுப்பு ஏதும் சொல்லாத மனைவியை ஏலத்தில் எடுப்பாரும் இல்லை ,
விறுவிறுவென வந்தவர் குருதியில் விளக்கேற்ற தன்கழுத்தை அறுக்க
அறுக்கரிவாளைப் பிடித்து, "நிறுத்து"  என சிவன் அருள் புரிந்தார்

கவிஞர் ந.திருக்காமு

# குள்ளநரி சிறுவர் பாடல்

ஓடி ஓடிப் பார்க்குது
தேடித் தேடிப் பார்க்குது
வயித்துப் பசி பிய்க்குது
வெயிலும் வாட்டிப் போடுது

களைப்புக் களைப்பா வருகுது
காலும் சுட்டுப் பொசுக்குது
காடு மலை அலைஞ்சித்தான்
கண்ணில காணலையே எதையுமே

தூரத்தில ஏதோ தெரியுதே
கிட்டத்தான் போயி பார்க்குதே
ஆஹா அழகுப் பழங்களே
ஆசை அதிகம் வந்ததே

திராட்சைக் கொடி கண்டது
குலைகுலையாகத் திராட்சைப் பழங்களே
தின்னத்தான் விருப்பம் கூடுதே
திசை எங்கும் பார்வையோடுதே

நாவில் நீரும் ஊறுதே
பறிக்க முடிய வில்லையே
எட்டி எட்டிக் கிட்டவில்லையே
தொங்கித் தொங்கி தோளும்வலிக்குதே

தோட்டக்காரன் சத்தம் கேட்டு
துள்ளித் துடித்து பாயந்ததே
தப்பினோம் பிழைத்தோம் என்றே
ஓட்டம் ஓட ஆரம்பித்ததே



கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# உணவுதானியங்கள்



இயற்கையால் படைக்கப்பட்ட அழியாத அற்புதமது
இந்தியாவில் பழம்பெரும் புலவர்களின் பாடுப்பொருளானது
இன்றும் பலருக்கு வெறும் சொப்பனமானது

சங்க இலக்கியப் பாடல்களின் வித்தானது
சரித்திரத்தில் ஊட்டச்சத்தின் ஓர் அங்கமானது

காலங்கள் கடந்தாலும் பாலாகாத ஆகாரமது
கிளறியதால் விளைநிலத்தில் உருவான கருவது
கலப்பையால் உருவெடுத்த உயிரற்ற ஓவியமது

விவசாயின் வியர்வையால் நனைந்து துளிர்த்தது
உழவனின் சிந்தனையால் உயிர்காக்கும் உணவானது

பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் பறைசாற்றும் அன்னத்தை
உயிர் காக்கும் நெற்பயிரை உதரறித்தள்ளி
உயிரைக் கொல்லும் ரசாயன உணவுகளை
உட்கொண்டு மாற்றத்தால் மடியும் மக்களுக்கு
உணவு தானியங்களைப் பற்றிய விழிப்புணர்வும்
ஊட்டசத்துப்பற்றிய பகுத்தறிவும் எப்பொழுதும் அவசியமே.

உழவனின் உழைப்பை வாழ்த்தி வணங்கி
உணவுதானியங்களை விளைவித்து உண்டு மகிழ்வோம்.


விவசாயத்தை காப்போம்.

கவிஞர் ரிஷி,வேலூர்

# தமிழறிஞர் வ.சு. செங்கல்வராயர்

(கட்டுரை)

ஆகஸ்ட் 15, 1883 - ஆகஸ்ட் 25, 1971



**சிறப்பு :**

தமிழறிஞர். தணிகைமணி, ராவ்பகதூர், வ.சு.செ. என்று அழைக்கப்படுவர் பல தமிழ் நூல்களை எழுதியுள்ளார்.

**வாழ்க்கைக் குறிப்பு:**

வ.சு.செங்கல்வராய பிள்ளை. 1883-ம் ஆண்டு ஆகஸ்ட் 13-ம் தேதி பிறந்தார். ஆண்டுக்கு ஒரு முறை தந்தைக்குப் பணிமாறுதல் கிடைக்கும்போது கும்பகோணம், நாமக்கல், மதுரை, திருவாரூர் என செங்கல்வராய பிள்ளையின் கல்வி தளமும் மாறிக் கொண்டு இருந்தது.

செங்கல்வராய பிள்ளை, மெட்ரிக்குலேஷன் படிப்பில் முதல் மதிப்பெண் பெற்றதால், ராமநாதபுரம் ராணி பெயரில் உள்ள உதவித் தொகையைப் பெற்றிருக்கிறார். பி.ஏ. படிப்பில் மாநிலத்தில் முதல் நிலை பெற்றதற்காக Frankilin Gell Gold Medal வாங்கி இருக்கிறார். மதுரை நேடிங் பள்ளியில் F.A படித்தபோது சொந்தக்காரர் ஒருவருடைய தூண்டுதலால் சென்னை மில்லர் கல்லூரிக்கு எம்.ஏ. படிக்கச் சென்றார். அதுதான் இப்போதைய தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி.

# தமிழறிஞர் வ.சு. செங்கல்வராயர்

## (கட்டுரை)

**வாழ்க்கைக் குறிப்பு:**

இவரின் குடும்ப வாழ்க்கை சோகங்கள் நிறைந்தது. 1907-ம் ஆண்டு தனுக்கொடி என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். அந்தப் பெண் சில ஆண்டுகளில் மரணம் அடைந்தார். அதன்பின் இரண்டாவது திருமணம் செய்தார். அந்தப் பெண்ணும் மரணம் அடைந்தார். தன் 47 வயதில் மூன்றாவது திருமணம் செய்தார். இவருக்கு நான்கு பிள்ளைகள்.

**தமிழ்ப் பணி**

சைவக் குடும்பப் பின்னணியாலும், இவருக்குத் தமிழ் கற்பித்த தமிழாசிரியர்களான பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், கோபாலாசாரியார் ஆகியோரின் தாக்கத்தாலும், 1905-இல் அரசுப் பணியில் சேர்ந்த இவர், அலுவலகப் பணியையும், தமிழ்ப் பணியையும் ஒருங்கிணைத்துச் செய்தார்.

சிறுவயதிலேயே தனது தமையனாரிடம் யாப்பிலக்கணங்களைக் கற்றுக்கொண்ட இவர்,

"கண்ணனும் வேதனும் போற்றுமுருகா கவின் மணியே
விண்ணவர் கோன்தான் பதம்பெறச் செய்த செவ்வேலவனே
பெண்ணோடு பாகன் அளித்த குமரா பெருநிதியே
தண்ணருளே பொழி தேவே தணிகைத் தயாநிதியே"

என்று முருகனைப் புகழ்ந்து பாடல்களைப் பாடியுள்ளார். திருத்தணிகை முருகனைப் போற்றும் பாங்கிலான இப்பாடல், தணிகைமணியின் தொடக்ககாலப் பாடல்களில் ஒன்று எனலாம்.

# தமிழறிஞர் வ.சு. செங்கல்வராயர்

(கட்டுரை)

## எழுதிய நூல்கள்



தணிகைமணி தாம் வாழ்ந்த காலத்தில் ஏறத்தாழ நாற்பது நூல்களைப் படைத்துள்ளார். இவை பெரும்பாலும் முருகனைப் பற்றியனவாகவும், தேவாரத்தைப் பற்றியனவாகவும் உள்ளன.

திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ், தணிகைப் பதிகம், தணிகைத் தசாங்கம், வேல்ப்பாட்டு, சேவல்பாட்டு, கோழிக்கொடி, தணிகைக் கலிவெண்பா, திருத்தணிகேசர் எம்பாவை, திருத்தணிகேசர் திருப்பள்ளியெழுச்சி, மஞ்சைப் பாட்டு, வள்ளி திருமணத் தத்துவம், வள்ளி}கிழவர் வாக்குவாதம் ஆகியவை அவற்றில் முக்கியமானவை. திருப்புகழுக்கு முழுமையாக எளிய உரையெழுதிப் பதிப்பித்தது இவரது சாதனையாகும்.

இவை தவிர, முருகனைப் பற்றிய பாடல்கள் அனைத்தையும் தொகுத்து, "முருகவேள் பன்னிரு திருமுறை' என்ற தொகுப்பையும் தந்துள்ளார். இதனுள் திருப்புகழ் கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவகுப்பு, சேய்த்தொண்டர் புராணம் முதலியன உள்ளன.

தணிகைமணி, திருப்புகழுக்கு மிக எளிமையான உரையை எழுதிப் பதிப்பித்துள்ளார். 1951-ஆம் ஆண்டு முதல் இவரின் திருப்புகழ் உரை வெளிவரத் தொடங்கியது. இதை அவர், இதழ் போன்றே பகுதி பகுதியாக வெளியிட்டுள்ளார்.

## தேவார ஒளிநெறி

தணிகைமணியின் மற்றுமொரு சிறந்த முயற்சி, தேவார ஒளிநெறி, தேவார ஒளிநெறிக் கட்டுரைகள், திருவாசக ஒளிநெறி, திருவாசக ஒளிநெறிக் கட்டுரைகளாகும். தேவாரத்திலுள்ள சொற்கள், தலங்கள், அரிய சொல்லாட்சிகள், அடியவர்கள் முதலியவற்றுக்கு அகர வரிசையில் விளக்கம் தந்துள்ளார். இவரின் தேவார ஒளிநெறியானது 466 தலைப்புகளில் மூன்று பாகங்களாகவும், அப்பர் தேவார ஒளிநெறி 190 தலைப்புகளில் இரண்டு பாகங்களாகவும், சுந்தரர் தேவார ஒளிநெறி 261 தலைப்புகளில் ஒரே நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

1. திருப்பரங்குன்றம் திருப்புகழ் -முதல் திருமுறை
2. திருச்செந்தூர் திருப்புகழ்- இரண்டாம் திருமுறை
3. திருவாவினன்குடி திருப்புகழ்- மூன்றாம் திருமுறை
4. சுவாமிமலை திருப்புகழ்- நான்காம் திருமுறை
5. குன்றுதோறாடல் திருப்புகழ்- ஐந்தாம் திருமுறை
6. பழமுதிர்சோலை திருப்புகழ்- ஆறாம் திருமுறை
7. பொது திருப்புகழ் பாடல்கள்- ஏழாம் திருமுறை
8. கந்தரலங்காரம், கந்தரந்தாதி- எட்டாம் திருமுறை
9. திருவகுப்பு- ஒன்பதாம் திருமுறை
10. கந்தரனுபூதி- பத்தாம் திருமுறை
11. நக்கீரர், பரிபாடல் ஆசிரியர்கள், கல்லாடர் முதலானோர் பாடிய பாடல்கள் — பதினோராம் திருமுறை.

# தமிழறிஞர் வ.சு. செங்கல்வராயர்

(கட்டுரை)

தேவார ஒளிநெறி

எனினும் பன்னிரு சைவத் திருமுறைகள் போல குமரக்கடவுளுக்கு அமையாததால் வருந்திய அவர் முருகனை மனமுருக வேண்டினார். அப்போது இறையருளால் தணிகைமணி செங்கல்வராய பிள்ளைக்கு 'சுந்தரர் உலா' என்ற புத்தகம் கிடைத்தது. அந்தப் புத்தகத்தின் கருத்துக்களில், அழகிய தமிழ் நடையில் வியந்துபோன செங்கல்வராயப் பிள்ளை, அதை எழுதிய புலவரைத் தேடி அலைந்தார்.


இறுதியாக தேனூர் வரகவி வே.செ.சொக்கலிங்கனார் என்ற புலவர்தான் அதை எழுதியவர் என்று கண்டறிந்து, அவரிடம் தனது ஆசையைக் கூறினார். 11 திருமுறைகளைத் தொகுத்த அவருக்காக, 12ஆம் திருமுறையாக முருகனடியார்கள் வரலாறு என்ற 'சேய்த்தொண்டர் புராணம்' என்ற நூலை எழுத சொக்கலிங்கனார் ஒப்புக்கொண்டார்.

பன்னிரண்டாம் சைவத் திருமுறையான பெரிய புராணத்தை, சேக்கிழார் நாடெங்கும் சுற்றி சைவ அடியார்களின் தகவல்களை அறிந்து ஒரே ஆண்டில் எழுதியதுபோல, சொக்கலிங்கனாரும் முருகன் அருளால் ஒரே ஆண்டில் (1941- 42) முருகப்பெருமானின் 12ஆம் திருமுறையை 3,333 பாடல்களுடன் எழுதிக் கொடுத்தார். முருகனடியார்கள் வரலாறு என்ற இந்த 'சேய்த்தொண்டர் புராணம்' நூல் முருகப் பெருமானின் 12ஆம் திருமுறையானது. முருகனை முதன்மைக் கடவுளாக வழிபடும் அடியார்களின் வீட்டில் இந்த முருகவேள் பன்னிரு திருமுறைகள் வணங்கப்பட்டு வருகின்றன.

# தமிழறிஞர் வ.சு. செங்கல்வராயர்

(கட்டுரை)

## இறப்பு



வாழும் போது பல பாரட்டுகளையும், சித்தாந்த கலாநிதி, செந்தமிழ்மாமதி, தணிகை மணி போன்ற பட்டங்களையும், விருதுகளையும் பெற்றிருக்கிறார். இவரின் நேர்மையைப் பாராட்டி பிரிட்டீஸ் அரசு ராவ்சாகிப், ராவ்பகதூர் ஆகிய பட்டங்களைக் கொடுத்துள்ளது.

தெ.பொ.மீ-யின் பரிந்துரையின் பேரில் 1969-ம் ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அவருக்கு பி.லிட் பட்டம் அளித்து கௌரவித்தது. 90 வயது வரை வாழ்ந்த செங்கல்வராய பிள்ளை கடைசி வரை தமிழுக்காகப் பணியாற்றியுள்ளார். 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் 25- ம் தேதி இறப்பதற்கு சில நாள்களுக்கு முன் திருவிசைப்பா பற்றி ஆராய்ச்சி நூலை வெளியிட்டிருக்கிறார்.

கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
உன்னை நீயே
செதுக்கிக் கொள்ள
பலரது அவமானங்களும்
சிலரது துரோகங்களும்
தான் உனக்கு
உளியாக இருக்கும்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com